**செய்தி வெளியீடு எண்:218** **நாள்: 10.04.2013**

## அரசின் சார்பில் சென்னையில் கோடைக் கால கலைப்பயிற்சி

கலை பண்பாட்டுத்துறை, ஒவ்வொரு ஆண்டும் கோடை விடுமுறையில் 5 வயது முதல் 16 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவியர் விடுமுறையை பயனுள்ள வகையில் கழிப்பதற்காகவும், நலிந்து வரும் கலைகளுக்கு புத்துயிர் அளிக்கவும், மாணவ மாணவிகளின் கலைத் திறமைகளை கண்டறிந்து அவற்றை ஊக்கப்படுத்தவும் தமிழ்நாடு ஜவஹர் சிறுவர் மன்றத்தின் மூலம் கோடைக்கால கலை பயிற்சியினை நடத்தி வருகிறது.

சென்னை மயிலாப்பூர் ஜவஹர் சிறுவர் மன்றத்தில் நடைபெறும் பயிற்சியில், பரதநாட்டியம், குரலிசை, கீபோர்டு, மிருதங்கம் தபேலா, சிலம்பாட்டம், நாட்டுப்புற நடனம், வீணை, டிரம்ஸ், நாடகம், ஜிம்னாஸ்டிக்ஸ், ஓவியம், கணினி, தையல், கராத்தே ஆகிய 14 கலைகளிலும், சென்னை வியாசர்பாடி விஸ்டம் மெட்ரிக்குலேசன் பள்ளியில் நடைபெறும் பயிற்சியில், ஜிம்னாஸ்டிக்ஸ், கராத்தே, டிரம்ஸ், கணினி ஆகிய 4 வகை கலைகளிலும், சென்னை வில்லிவாக்கம் ஸ்ரீபாட்ஷா ரெட்டி மெட்ரிக்குலேசன் பள்ளியில் நடைபெறும் பயிற்சியில் பரதநாட்டியம், கீபோர்டு, ஓவியம், சிலம்பாட்டம், டிரம்ஸ், யோகா ஆகிய 6 வகை கலைகளிலும், சென்னை இராமபுரத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர்.பேச்சு மற்றும் செவித்திறன் குறையுடையோர் பள்ளியில் நடைபெறும் பயிற்சியில், பரதநாட்டியம், ஓவியம், கணினி, கைவினை ஆகிய 4 கலைகளிலும், சென்னை, தாம்பரம் சேலையூர் ஜியான் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் பயிற்சியில் பரதநாட்டியம், ஓவியம், கராத்தே, சிலம்பாட்டம், கீபோர்டு, குரலிசை ஆகிய 6 வகை கலைகளிலும் என ஐந்து மையங்களில் கோடைக்கால கலைப்பயிற்சிகள் 22.4.2013 முதல் 10.5.2013 வரை நடைபெறவுள்ளது. பயிற்சி பெறும் மாணவர்கள் அனைவருக்கும் பயிற்சியின் நிறைவில் அரசின் சார்பில் சான்றிதழ் வழங்கப்படும்.

சென்னையில் கோடைக்கால கலைப்பயிற்சியில் பங்கு பெறும் மாணவர்களில் மிகச்சிறந்த மாணவர்களில் 10 பேர் தெரிவு செய்யப்பட்டு 16.05.2013 முதல் 25.05.2013 முடிய 10 நாட்கள் சேலம் மாவட்டம், ஏற்காடு நகரில் நடைபெறும் மாநில அளவிலான கலைப்பயிற்சியில் அரசின் சார்பில் இலவசமாக கலந்துகொள்ள உள்ளனர்.

கலைப்பயிற்சி குறித்து விவரம் அறிந்திட 28192152, 28193196 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**